முற்பகல் 11–50

4. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2007-2008, முன்மொழிதல்(ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007–2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழிதல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சாமி, உட்காருங்கள். திரு. ஹசன் அலி, உட்காருங்கள். திரு. ஜாண் ஜோசப், உட்காருங்கள். திரு. ஜெயபால், உட்காருங்கள்.*

2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year 2007-2008."

5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*